(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE **23 PTM 311**

REG.NO:

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் - 2024

எம்.ஏ. தமிழ் இலக்கியம் **மதிப்பெண்கள் : 75**

மூன்றாம் பருவம் **நேரம் : 3 மணி**

தொல்காப்பியம்–பொருளதிகாரம்-1

பகுதி – அ **(10x1=10 மதிப்பெண்கள்)**

பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக **(K1)**

1. வைகறை என்பது எந்த நிலத்திற்குரிய காலம் எது?
   அ. முல்லை ஆ. குறிஞ்சி இ. பாலை ஈ. மருதம்
2. பாடல் சான்ற புலனெறி வழக்கம் கலியே..... ஆயிரு பாவினும்
   அ. கலித்தொகை ஆ. பரிபாடல் இ. பதிற்றுப்பத்து ஈ. அகநானூறு
3. வெட்சிக்குப் புறனானத் திணை எது?
   அ. குறிஞ்சி ஆ. முல்லை இ.பாலை ஈ. மருதம்
4. 'வாயுறை வாழ்த்து' எந்தத் துறைக்குள் அடங்கும்?
   அ. கைக்கிளை ஆ. பாடாண் இ. வஞ்சி ஈ. வழிஞை
5. பெருமையும் உரனும் யாருடைய குணங்கள்?
   அ. தலைமகன் ஆ. தலைமகள் இ.தோழி ஈ. நற்றாய்

பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க. (K2)

6. தொல்காப்பியர் குறிப்பிடும் நடுவண் ஐந்திணையைக் குறிப்பிடுக.
7. பிரிவின் வகைகளைக் குறிப்பிடுக.
8. 'இளமை தீர்திறம்' என்றால் என்ன?
9. மொழி எதிர் மொழிதல் யாருக்கு உரியது?
10. இறைச்சிப் பொருளின் இயல்பு யாது?

பகுதி – ஆ (5 x 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K3)

11. அ. முதற்பொழுதின் வகைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ. முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை விளக்குக.

(த.பி.பா.)

12. அ. வெட்சியின் இலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

ஆ. உழிஞையின் இயல்புகளைக் குறிப்பிடுக.

13. அ. இயற்கைப் புணர்ச்சி குறித்து ஆராய்க.

(அல்லது)

ஆ. இரவுக்குறிக்குரிய இடம் குறித்து எழுதுக.

14. அ. கரணம் ஏற்பட்ட காரணத்தை ஆராய்க.

(அல்லது)

ஆ. தலைமகனின் ஊடல் குறித்து எழுதுக.

15. அ. செலவழுங்கல் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. அறத்தொடு நிற்றலின் வகைகளைக் குறிப்பிடுக.

பகுதி – இ (5 x 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க. (K4 & K5)

16. அ. தொல்காப்பியரின் உரிப்பொருள், கருப்பொருள் சார்ந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ. உள்ளுறை உவமம் குறித்து ஆராய்க.

17. அ. வெட்சியின் துறைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ. தும்பையின் துறைகளை விளக்கி எழுதுக.

18. அ. களவின் கண் தலைவிக்குக் கூற்று நிகழ்வதை ஆராய்க.

(அல்லது)

ஆ. களவின் கண் தோழிக்குக் கூற்று நிகழ்வதை ஆராய்க.

19. அ. கற்பு மணம் குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ. 'அலர்' குறித்த தொல்காப்பியரின் கருத்துக்களை ஆராய்க.

20. அ. வரைவு கடாதால் குறித்து விரிவாக ஆராய்க.

(அல்லது)

ஆ. இறைச்சி குறித்த தொல்காப்பியரின் பார்வையை ஆராய்க.

ETHICAL PAPER

****